# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9355/B/2019**

திரு.மு.வேல்முருகன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
சாத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCKDOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில் மனுதாரர் திரு.மு.வேல்முருகன், அவர்களும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.S.சங்கர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் அவர்களும் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 02.11.2018 தேதியிடப்பட்ட மனுவில், 2010 முதல் 2018 அக்டோபர் மாதம் 2ம் நாள் வரை மாவட்ட ஆட்சியர் கலந்துகொண்ட கிராமசபைக் கூட்டத்தின் தீர்மான நகல் மற்றும் வருகைப்பதிவேடு நகல் கோரியும், 2010 முதல் 2018 அக்டோபர் மாதம் 2ம் நாள் வரை மாவட்ட ஆட்சியர் கலந்துகொண்ட கிராமசபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் இன்றைய நிலை மற்றும் மொத்தம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் ஆகியவை உள்பட 3 இனங்களில் தகவல்களை கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார். அம்மனுவினைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), விருதுநகர் மாவட்டம் அவர்கள் 06.12.2018ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக பிரிவு 6(3)ன் கீழ் மனுதாரரின் மனுவினை பொதுத் தகவல் அலுவலர், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு மாறுதல் செய்துள்ளார். மனுதாரரின் மனு 18.12.2018ம் தேதியிப்பட்ட கடிதம் வாயிலாக மீண்டும் பொதுத் தகவல் அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 18.01.2019ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 2010 முதல் 2018 அக்டோபர் 2ம் தேதி வரை நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் பற்றாளர்கள் மட்டுமே கலந்துகொண்டுள்ளனர் என்று தகவல் வழங்கியுள்ளார்.

3. உரிய தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர் 26.07.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 20.09.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கின் மீது தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. தொலைபேசியின் வாயிலாக மேற்கொண்ட விசாரணையில், மனுதாரர் தான் 2010 முதல் 2018 அக்டோபர் மாதம் 2ம் நாள் வரை மாவட்ட ஆட்சியர் கலந்துகொண்ட கிராமசபைக் கூட்டத்தின் தீர்மான நகல் மற்றும் வருகைப்பதிவேடு நகல் உள்பட 3 இனங்களில் தகவல்கள் கோரியதற்கு, பொதுத் தகவல் அலுவலர் சாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 2010 முதல் 2018 அக்டோபர் 2ம் தேதி வரை நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் பற்றாளர்கள் மட்டுமே கலந்துகொண்டுள்ளனர் என்றும், மேற்படி கிராமசபைக் கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்றும் தவறான மற்றும் திசை திருப்பும் வகையில் தகவல்களை வழங்கியுள்ளார் என்றும் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், உரிய தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார். மேலும் மனுதாரர் தான் தகவல்களை கோருவதால், பொது அதிகார அமைப்பிலிருந்து தனக்கு மிரட்டல்கள் வருவதாகவும், மேற்படி ஊராட்சியில் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் நடைபெறுவதன் பேரிலேயே தான் பொது நல நோக்கத்துடன் தகவல்களை கோருவதாகவும், எனவே, தான் கோரிய தகவல்கள் வழங்கப்படுவதுடன், நாளதுவரை தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்களை 7 நாட்களுக்குள் வழங்குவதாக ஏற்பளிப்புச் செய்தார்.

5. **எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றது:**

1. **உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விருதுநகர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் 02.11.2018 தேதியிட்டு பிரிவு 6(1)ன் கீழ் கோரிய தகவல்கள் சம்மந்தமாகவும், மனுதாரர் தான் தகவல்களை கோருவதன் மூலம் தன்னையும், தன் குடும்பத்தை சார்ந்த நபர்களை பொதுத் தகவல் அலுவலர் மிரட்டுவதாக தெரிவித்தது தொடர்பாகவும், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) விருதுநகர் மாவட்டம் அவர்கள் மனுதாரரையும், வட்டார வளர்ச்சி அலுவலர், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆகியோரை விசாரணைக்கு அழைத்து, உரிய விசாரணை மேற்கொண்டு, அது குறித்ததான விரிவான அறிக்கையினை, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 25 நாட்களுக்குள் விருதுநகர் மாவட்டம், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலக பொது தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்படுகின்றது.**

2. **பொதுத் தகவல் அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களையும் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி, மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கிய தகவல்கள் ஆகியவைகள் ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகின்றது.**

3. **மனுதாரரின் 02.11.2018 தேதியிடப்பட்ட பிரிவு 6(1) கீழான மனுவினைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் பிரிவு 7(1)ன்படி 30 தினங்களுக்குள் முழுமையான தகவல்கள் வழங்காமை குறித்து ஏன் அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகின்றது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9355/B/2019</u>**
**<u>பெறுநர்</u>**
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்,
உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
சாத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம்.

திரு.மு.வேல்முருகன்,
த/பெ.க.முத்தையா,
5/1046, கிழக்குத்தெரு,
வெள்ளூர் - 626 005,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
SJPS-18-11-2020